**ஏழைகள் சார்பு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013**

ஏழைகள் சார்பு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஐசீ) இடையில் கைசாத்திடப்பட்ட 2006 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்பி/87 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4(8) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2008 ஒக்தோபர் 01 இலிருந்து அமுலாகுமாறு சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையுடன் (ஜேஐசீஏ) இணைக்கப்பட்டிருந்தது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

ஏழைகளுக்காதரவான கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. மட்டக்களப்பில் புதிய கல்லடி பாலத்தின் நிருமாணம் உள்ளடங்கலாக அக்கரைப்பற்றிற்கும் திருக்கண்டிமடுவுக்கும் இடையில் சீரழிந்த மற்றும் பகுதியாளவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தேசிய வீதியை மீளமைப்பதன் ஊடாக செயற்திட்ட பிரதேசத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நுழைவுப் பாதைகளை முன்னேற்றுவதன் மூலம் வளர்ச்சி குறைந்த கிழக்கு உள்ளூர் பொருளாதாரத்தின் பொருளாதார அடிப்படையினை மீளமைத்தல், பிராந்திய பொருளாதார சமமின்மையை குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஜ.யென் 4,460 மில்லியனாக உள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2006 இல் தொடங்கியிருந்ததுடன் 2010 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டில்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் காலப்பகுதி செயற்திட்ட காலப்பகுதி 2013 செப்தெம்பர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கொல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க

மதிப்பீடுகள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்ததா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் செய்யப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்து ரைக்கப்பட்ட அளவீடுகளுடன் இணங்கியதாக இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகப் பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவுகள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 500,395,458 ஆனதுடன 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 7,510,101,696 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின வகுதிகள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 136,538 | - | 136,538 |
| நடைபெறும் வேலைகள் | 445,695,635 | 6,150,036,481 | 6,595,732,116 |
| ஆலோசனை கட்டணம் | 47,318,437 | 743,802,052 | 791,120,489 |
| செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயலவினம் | 7,244,848 | 115,867,705 | 123,112,553 |
| மொத்தம் | 500,395,458 | 7,009,706,238 | 7,510,101,696 |

## 5 கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கீழான தனிப்பட்ட வீதிகளின் புனரமைப்பிற்காக ஏற்பட்ட மொத்தக் கிரயத்தை இனங்காண்பதற்கு ஏடுகள் மற்றும் பதிவேடுகளை செயற்திட்டமானது புறப்பாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு -இரத்தினபுரி – வெல்லவாயா- மட்டக்களப்பு வீதி, திருக்கண்டிமடு-திருகோணமலை வீதி மற்றும் கல்லடிப் பாலம் என்பவற்றின் நிர்மாணம் 2013 செப்தெம்பர் 15 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டு செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட நிர்மாண வேலைகளிற்காக ஏற்பட்ட ஆலோசனைக் கட்டணம் மற்றும் செயற்திட்ட முகாமைத்தவ பிரிவு செலவினம் என்பவற்றினை கொண்டுள்ள ரூபா 7,509,965,158டிகூட்டுமொத்தத் தொகையான மொத்தக் கிரயம் நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மூன்று வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஒரே அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ளன. எவ்வாறாயினும், அந்த செயற்திட்டங்கள் தொடர்பான தண்ணீர், மின்சாரம், தொலைபேசி, போக்குவரத்தக் கட்டணங்கள், எரிபொருள் செலவினம் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் என்பவற்றிற்காக ஏற்பட்ட ரூபா 6,420,120 கூட்டுமொத்தத் தொகையான சகல செலவினங்களும் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு தனித்தனியான செயற்திட்டங்களிற்கு சாட்டுதல் செய்யாமல் இந்த செயற்திட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிரந்தது.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளயர்வாண்டின் போதன நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான குறித்த சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | ஜ.ஜென் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ஜ.ஜென் மில் | ரூபா. மில் |
| ஜேஐசீஏ | 4,460 | 6,158 | -- | - | 4,837 | 6,205,604 |
| இலங்கை அரசாங்கம் | - | 1,532 | 88,476 | 88,476 | - | 1,027,843 |
| மொத்தம் | 4,460 | 7,690 | 88,476 | 88,476 | 4,837 | * 7,233,447 |

* பணிக்கொடைக்கான ஏற்பாடு, பிடிகாசு மற்றும் அட்டுறு செலவினம் என்பன தவிர்க்கப்பட்டதன் காரணமாக இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் வித்தியாசப்படுகின்றன.

### 6.2 பௌதீக செயலாற்றல்

கல்லடிப் பாலத்தின் நிர்மாணம் இயலளவை மதிப்பாய்வு செய்தல் மற்றும் முறைப்படி கேள்வியாளர்களின் கடந்த அனுபவம் என்பன இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, ரூபா 700 மில்லியனில் முதலாவது ஒப்பந்தகாரருக்கு பாலத்தின் நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் குறைவான செயலாற்றல் காரணமாக பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் மூல ஒப்பந்த பெறுமதியிலிருந்து 95 சதவீதத்தை பிரதிநிதித்தவப்படுத்திய ரூபா 1,389.5 மில்லியன் கிரயத்தில் இன்னொரு ஒப்பந்தகாரால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, முதலாவது ஒப்பந்த உடன்படிக்கையின் படி ரூபா 326,392,260 இற்று சமமான ஜ.யென் 228,600,000 தொகையான ஆலோசனைக் கட்டணம் மூல ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட ஆலோசனைக் கட்டணத்திலிரந்து 29 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 459,196,960 இற்கு சமமான ஜப்பான் யென் 321,318,914 ஆக திருத்தப்பட்டிருந்தது.